பயிற்சி அளிக்கப்படுவதுபோல, இந்த நுழைவுத் தேர்வு எழுது வதற்கும் தனியாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடை, எத்தனை இலட்சம் பேர்களுக்கு, எந்த முறையிலே அளிப்பது என்பது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவுத் தேர்வு என்பது 2 ஆண்டுகள் பிளஸ் 2 படித்திருக்கின்ற மாணவர்கள் நுழைவுத் தேர்வின்போது ஒரு "One Word Answer" போல சுருக்கமாக பதில் அளிக்கக் கூடிய சில கருத்துக்கள் அதில் கேட்கப்படுவதால் அவர்களுடைய முழுத் திறமை, அறிவுத் திறமை வெளிப்படுத்துவதாக அது அமையாது. ஆகவே, இந்தக் கேள்விமுறையை மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு முறை பற்றிப் பல்வேறு விதமான நிபுணர்கள் கருத்துக்கள் தொடர்ந்து வழங்கப்பட்ட முறையில் மாணவர்கள் விடை எழுதுவதற்கு, தங்களுடைய திறமையைப் பயன்படுத்தி எழுத வேண்டும் என்பதை விடத் தங்களுக்குத் தெரிந்த உண்மைகளை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். அதுதான் அவர்களுடைய அறிவாற்றலுக்குத் தக்க சான்று என்ற முறை அண்மைக்காலத்திலே எல்லா பல்கலைக் கழகங்களிலும், உலகம் முழுவதிலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வினாடி வினா என்று தொலைக் காட்சியிலே வருவதைப் போல், அவர்கள் ஒரு கேள்வியை எண்ணியவுடன் தங்களுடைய விடை மனதிலே தோன்றுகின்ற ஒரு தகுதியை அதிகச் சிரமம் இல்லாமல் வெளிப்படுத்துவதன் மூலமாக அந்த மாணவருடைய இயற்கை அறிவாற்றலைப் புலப்படுத்துகிற ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இது எந்த வகையிலும் தவறல்ல என்றுதான் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

திருநெல்வேலியில் பல்கலைக் கழகம்.

*5503—திரு. அ. லெ. சுப்பிரமணியன், திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி, திருநெல்வேலியில் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

1990 சனவரி 23]

(ஆ) ஆம் எனில், அதனை திருநெல்வேலி தென்காசிச் சாலையில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியை அடுத்து அமைக்கின்ற திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; இக்கருத்து அரசின் பரிசீலனையில் தொடர்ந்து நீடித்து உள்ளது.

9-15 மணி

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை அபிசேகப்பட்டி பால் பண்ணையில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் ஒட்டுமொத்தமாக உள்ளது. ஆகவே, இடம் இல்லாத குறை இல்லை. அந்தத் துறை அமைச்சரும் கல்வித்துறைக்கு அதை மாற்ற இசைவு தந்திருக்கிறார்கள். எனவே, அந்த இடத்தில் பல்கலைக் கழகம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கிடைத்து விட்டது, நிதி கிடைக்கவில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவிலே அந்தப் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று நான் மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கூட மதுரையிலே ஒரு பொதுக்கூட்டத்திலே ஒரு முறை பேசியிருக்கிறார்கள். எனவே அந்த முறையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கூட்டத்தில் பேசியதை எல்லாம் இங்கே மேற்கோள் காட்டக்கூடாது என்பது விதி.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் பேசியதால் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தன்னுடைய வாதத்திற்கு வலுவூட்டுவதற்காகத் தலைவர் அவர்களையோ அல்லது ஆளுநர் அவர்களையோ மேற்கோள்காட்டிப் பேசக் கூடாது என்பது மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அறிந்தே மரபை மீறுகிறார். (சிரிப்பு).

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்தப் பல்கலைக் கழகத்தை இந்த நிதி ஆண்டிலேயே அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது, பல்கலைக் கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்திவிடுகிற காரணத்தால் மட்டும், பல்கலைக் கழகங்களால் கிடைக்கிற பலன் கிடைப்பது இல்லை. ஒரு பல்கலைக் கழகம் என்பது தகுந்த நிதி அமைப்போடு, முன் ஏற்பாட்டோடு ஏற்படுத்தப்பட்டால்தான் அதனால் ஓரளவுக்குத் தகுந்த பலன் அந்த வட்டாரத்துக்குக் கிடைக்கும். எனவே, திருநெல்வேலியில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டும் என்பது கொள்கையளவில் இருந்தாலும் கூட, 50 கோடி ரூபாயாவது இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்கு அதற்காக ஒதுக்கப்பட்டால் தவிர அந்தப் பல்கலைக் கழகம் செயல்பாட்டுக்கு வரக்கூடிய நிலைமை ஒப்புக்கு இருக்குமே தவிர அதனால் பலன் இருக்காது. மாறாக யூனிவர்சிட்டி சென்டர் என்ற முறையிலே அதிகச் செலவு இல்லாமலே, பல்கலைக் கழகத் தனி உரிமை இல்லாவிட்டாலும்கூட பல்கலைக் கழகத்தில் நடக்கக்கூடிய ஆய்வு திருநெல்வேலியிலும் நடக்கக்கூடிய அளவுக்கு ஓர் அமைப்பு இயங்கி வருகிறது. எனவே, தகுந்த நிதி கிடைக்கிறபோது உரிய முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்காகத் திருநெல்வேலியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், ஒரு சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால் அல்லது ஒரு பிரச்சினை என்றால் மதுரை யூனிவர்சிட்டி என்றால் மதுரைக்கும், சென்னை யூனிவர்சிட்டி என்றால் சென்னைக்கும் அங்குள்ள மாணவர்கள் வர வேண்டிய நிலைமை இருக்கிறது. இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்க்க எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கே பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் அரசாங்கமே நடக்காது.